மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்போதிருந்த நிலைமையில் காந்தியடிகள் அப்படிக் கூறினார். இன்றைக்கு இருந்தால் கருத்தடையை இரட்டிப்பான முறையில் செய்யவேண்டுமென்றுதான் அவர் கூறுவார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மக்கள் அடிப்படையில் பாராளுமன்றத்தில் இடங்களை ஒதுக்குவதில் இருக்கும் சிக்கல்களை மாற்றுவதற்கு மாற்றுத் திட்டமாக மத்திய அரசிடம் இந்த அரசு என்ன யோசனை கூறியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாற்றுத் திட்டத்தைத்தான், இங்கு மாத்திரம் அல்ல, மத்திய அரசிடமும் **எடுத்துக் கூறியிருக்கிறோம்.** 1951-ஆம் ஆண்டு சென்ஸஸ் அடிப்படையில் **இடங்களை** ஒதுக்குவதை நிர்ணயிக்க வேண்டுமென்பதுதான் மாற்றுத் திட்டம்.

திரு. மா. பா. சாரதி : குடும்ப நலத் திட்டம் மேலும் நல்லபடி நடைபெற கருச் சிதைவுத் திட்டத்தை அரசு கையாளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி இப்போது மத்திய அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. **உறுப்பினர் அவசரப்பட வேண்டாம்.**

திரு. கே. விநாயகம் : பாராளுமன்றத்தில் அதிகமான இடங்களைப் பெறுவது நம்முடைய முக்கியமான லட்சியமா அல்லது ஜனத்தொகையைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் குறைப்பது முக்கியமான லட்சியமா ? இதிலே அமைச்சருடைய பரிந்துரை என்ன ? எங்களை எல்லாம் அந்த வேலையிலே இறங்கச் சொல்லுகிறீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நம்முடைய நோக்கம் மக்கள் **தொகை குறைக்கப்பட வேண்டும் என்பது. அதாவது புதிதாக உற்பத்தியாவதைக் குறைப்பது என்பது. ஆனால் அந்த அடிப்**படையில் பாராளுமன்ற இடங்களை ஒதுக்கக்கூடாது ; 1951-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம்.

ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிகள்

*172 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி. **சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை** பகிர்ப்பாரா :—

திருமங்கலத்தில் உள்ள ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில், படிப்போரின் எண்ணிக்கை 80-ல் இருந்து 40-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதை மீண்டும் 80-ஆக உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1970 மார்ச் 3]

திரு. என். எஸ். வி. சித்தன் : மக்கள் தொகை உயர்ந்து வரும் இந்த நேரத்தில் இப்படி இடங்களைக் குறைப்பதால் படிப்பதற்கு வசதி குறைவாகும் நிலை உண்டாகிறது. ஆகவே, இருக்கின்ற வசதியைக் குறைக்காமல் பழைய நிலைக்கு உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மக்கள் தொகைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. மக்கள் தொகை உயர்ந்து வந்தாலும் கூட தேவைக்கேற்றபடி உற்பத்தி செய்யவேண்டும். குறிப்பிட்ட திருமங்கலம் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிக்கு நான்கு வகுப்புக்கள் தரப்பட்டிருந்தன. அங்கு ஒழுங்கீனங்கள் ஏற்பட்ட காரணத்தால் இரண்டு வகுப்புகளாகக் குறைக்கப்பட்டன. மறுபடியும் ஒரு வகுப்பு தரப்பட்டு அதற்குப் பிறகும் மாணவியர்களைச் சேர்ப்பதில் ஒழுங்கீனங்களும் பணம் வாங்கும் குற்றச்சாட்டுகளும் வந்ததால், கொடுத்த அனுமதி நீக்கப்பட்டு இரண்டு வகுப்புகளாக ஆக்கப் பட்டன. நமது மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மேலும் கூட்டுகின்ற நிலைமை இல்லை. இப்போது இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளே போதும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, புதிதாக எந்தப் பயிற்சிப் பள்ளியையும் உருவாக்குகின்ற நிலையில் தமிழக அரசு இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒழுங்கீனங்கள் காரணமாக இந்தக் குறிப்பட்ட பள்ளியின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்றார்கள். நான் புதிதாக அதிகப்படுத்தச் சொல்லவில்லை. ஏற்கனவே இருந்ததைத் தொடரச் சொல்லுகிறேன். குறிப்பிட்ட பள்ளியில் ஒழுங்கீனங்கள் இருக்கு மானால் வேறு பள்ளியில் 40 பிள்ளைகளைக் கொண்ட வகுப்பு தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான்கு வகுப்புகள் என்று இருந்ததில் இரண்டு ஜூனியர் வகுப்புகள் எடுக்கப்பட்டு விட்டன. மாநிலத்தில் இப்போதிருக்கும் சூழ்நிலையின் அடிப் படையில் இந்த வகுப்பையும் கூட்டுவதாக இல்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியையும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

*** 173 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தாராபுரத்தில் ஒரு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : ஏற்கனவே எங்கள் தாரா புரத்தில் பெண்களுக்கான ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இருந்தது. அது இப்போது வேறு ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டது.